3. கவன ஈர்ப்பு.

(அ) கோவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் மருத்துவர்கள் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன், ஈ.வே.கி.ச., இளங்கோவன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனையில் கடந்த 6 மாத காலமாக 7 மருத்துவ நிபுணர்களின் காலியிடம் நிரப்பப்படாததால் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டக் தலைமையிட மருத்துவமனைகளில் மக்கள் சிறந்த முறையில் சிகிச்சை பெற வேண்டுமென்ற நோக்கில், அங்கெல்லாம் சிறப்புத்துறைகள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன. இதனடிப்படையில் இதுகாறும் பொதுமருந்தியல், பொது அறுவை மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் நோயியல், முடநீக்கியல், காது, மூக்கு, தொண்டை இயல், சரும இயல், பால்வினை நோயியல் போன்ற துறைகளில் சிறப்பு மருத்துவர்கள் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பணியிடங்கள் அந்தந்த துறைகளில் பட்ட மேற்படிப்புப் பட்டம் பெற்ற குறித்தகாலம் பணிமுடித்து அனுபவம் மிக்கோரை முதுநிலைப்படி பணியமர்த்தி நிறை செய்யப்பட்டு வருகின்றன. இதற்கென ஒவ்வொரு

[திரு. ப. உ. சண்முகம்] [1987 ஏப்ரல் 22

சிறப்புத்துறைக்கும் ஒரு தேர்ந்த பட்டியல் முதற்கண் தயார் செய்யபபட்டு, அப்பட்டியலிலிருந்த முதுநிலை வரிசைப்படி சிறப்பு மருத்துவர்கள் பணியமர்த்தப்படவேண்டும். எல்லா சிறப்புத்துறைகளுக்கும் தேர்ந்தபட்டியல்கள் தயார் செய்யும் செயற்குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. மேலும் இப்பட்டியலில் இடம்பெறுவோரைக்கொண்டு, பட்டிய லுக்கு ஒப்பளிப்பு அளிப்பதை எதிர்நோக்கி, காலியிடங்கள் அனைத்தையும் நிறைசெய்யலாமென்பது குறித்தும் அரசு தீவிர மாகப் பரிசீலித்து வருகிறது. இது குறித்து அரசு ஆணைகள் விரைவில் வெளியிடப்படும் நிலையில் உள்ளன. இது சமயம் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை யில் காலியாக உள்ள 7 சிறப்பு மருத்துவ பணியிடங்களும் நிறை செய்யப்படும்.

இதற்கிடையில், ஒரு உதவி அறுவை மருத்துவர் தன்பெயரைத் தேர்ந்த பட்டியல் ஒன்றில் சேர்க்கவில்லையென்று உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார். இதன் மீது உயர்நீதி மன்றமும் ஒரு இடைக்காலத்தடை விதித்துள்ளது. அதனால் தேர்ந்த பட்டியல்கள் வெளியிடுதல், அதன்படி பணி யிடங்களை நிறை செய்தல் ஆகிய நடவடிக்கைகள் இந்த இடைக் காலத்தடை நீக்கப்படும் வரை நிறுத்திவைக்கப்படவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்த இடைக்காலத்தடை நீக்கப்பெறு வதற்கு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் எல்லாம் சிறப்புத் துறைகள் ஏற்படுத்தி தொழிலாளர்களும் பிறமக்களும் சிறந்த முறையில் சிகிச்சை பெற வாய்ப்பளிக்க வேண்டுமென்பதுதான் இவ்வரசின் நோக்கம். காலியிடங்கள் அனைத்தும் அதிவிரை வில் நிறை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. சுப்பராயன்: தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் ஒரு உதவி அறுவை மருத்துவர் தன் பெயரை தேர்ந்த பட்டியலில் சேர்க்கவில்லை என்று உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்துள்ளார் என்று இருக்கிறது. நடை முறையில் காலி இடங்களை நிரப்புவதில் பிரச்சனை வருகிற போது கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். பாதிக்கப்பட்ட அந்த

உதவி அறுவை மருத்துவரை அழைத்துப் பேசி, வழக்கை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்த மருத்துவர் நீதிமன்றத்தில் தடை ஆணை வாங்கியிருக்கிறார். தடை ஆணையை விலக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தடை ஆணையை விலக்கிய பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

(ஆ) கரூர் சாயப்பட்டறைக் கழிவு நீரால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் க. சோலைராசு, சு. ஜெகதீசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

* திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் நகரில் உள்ள சாயப்பட்டறைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரால் அப்பகுதி மக்களுக்கு பல், ஈறு வீங்குதல், தோல் வியாதி, வயிற்றுப் போக்கு தோன்றுவதால் பாதிக்கப்பட்ட அவர்களது நிலைமை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 வது பிரிவின் கீழ் அன்றாடக் கழிவுநீர்/தொழிற்சாலைக் கழிவுநீரினை வெளிவிட வாரியத்தின் அனுமதி கோரி, கரூரில் உள்ள 46 சாயம் ஏற்றும் தொழிற்சாலைகள் விண்ணப்பித்துள்ளன